மனனம் செய்ய
இந்த வார வசனம்:

விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்.

(யோவான்: 6:51)

அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் திருவுடலாகவும் திரு இரத்தமாகவும் உருமாற்றப்படும் (மாற்றம்) மறை உண்மை, தொடர்ந்து பலருக்கு அவர்மீதுள்ள நம்பிக்கைக்கு சவால் விடுக்கின்றது. இயேசு அப்பத்தை எடுத்து, “இது என் உடல்”, பின்பு திராட்சை இரசத்தை எடுத்து, “இது என் இரத்தம்” என்று சொல்லும்போது, அவருடைய வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் அல்லவா? ஆனாலும் அவர் சொன்ன மற்ற அனைத்தையும் அவர்கள் நம்பினார்கள்.

இயேசுவின் குருத்துவத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. நற்கருணையை ஏற்படுத்தி அவரின் ஒரே பலியில் அவருக்கு நம்மீதிருந்த அன்பை வெளிக்காட்டினார்; அவருடைய விண்ணக அரசை நாம் உரிமையாக்கிக்கொள்ள தம்முடைய தெய்வீகத்தையும், அருளையும் நம்மோடுப் பகிர்ந்துகொண்டார். ஒவ்வொரு திருப்பலியிலும், நம் மீட்புக்காக தொடர்ந்து தம்மையே அர்ப்பணிக்கின்றார். **நற்கருணை - கடவுள் நமக்குக் கொடுத்த மாபெரும் பரிசு. திருஅவையாக, நம் வாழ்வின் ஊற்றாகவும் உச்சமாகவும் நற்கருணைத் திகழ்கிறது.**

பெத்சாய்தாவில், தம்மிடம் வந்த நோயாளிகளைக் குணப்படுத்தினார். அதன்பின் வெறும் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு அங்குப் பசியாய் இருந்த ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார். இன்று கோடிக்கணக்கான மக்களுக்கு அவருடைய உடலும் இரத்தமும் நோய்தீர்க்கும் மருந்தாகவும், வலுவூட்டும் ஆன்ம உணவாகவும் திகழ்கிறது. நாம் எதை பெற்றுக்கொள்கிறோமோ அதுவாகவே மாறுகிறோம் (புனித அகுஸ்தினார்) எனவே, நாம் கிறிஸ்துவில் ஒரே உடலாக மாறுகிறோம். கிறிஸ்துவின் பலி நம்முடைய பலியாக மாறுகிறது. நாம் நம்மிலே இறக்கிறோம். பிறருக்காக கூடுதலாக பணி செய்கிறோம். நற்கருணை சமூகத்தின் மத்தியில் அன்பின் ஒன்றிப்பை உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் இரக்கத்தையும் அன்பையும் மக்களுக்காகத் தருவதில் கிறிஸ்துவைப் பின்பற்றுமாறு நாம் தூண்டப்படுகிறோம்.

நம்முடைய முதன்மைக்குருவாகிய இயேசு கிறிஸ்து அவருடைய பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் நினைவுச்சின்னமாக, அர்ப்பணத்தின் அடையாளமாக அவருடைய உடலையும் இரத்தத்தையும் நற்கருணையை ஏற்படுத்தினார். அவரை நாம் உட்கொண்டு, நம்முடைய எண்ணத்தை அவருடைய அருளால் நிரப்பி, நம்முடைய எதிர்கால மாட்சிக்காக உறுதிமொழி எடுத்துக்கொள்கிறோம். (கதிம எண்: 1323)

நற்கருணை நேர்மையாக இருப்போருக்கான பரிசு அல்ல; மாறாக பலவீனமானவர்களுக்கு ஒரு சக்திவாய்ந்த மருந்தும் ஊட்டச்சத்துமாகும். (திருத்தந்தை பிரான்சிஸ்) உங்களுக்கும் எனக்குமானது. ✠

**இன்றைய வாசகங்கள்:**

தொநூ: 14: 18-20;

திபா: 110: 1-4;

1 கொரி: 11: 23-26;

லூக்: 9: 11-17.

INTERNAL CIRCULATION ONLY
BUL 25/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

19 ஜூன் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

**இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா**

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:
**கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா (ஜூன் 19)**



# நற்கருணை

## கடவுள் நமக்குத் தந்த மாபெரும் பரிசு

இன்றைய முதல் வாசகத்தில், அரசனும் உன்னத கடவுளின் குருவுமாகிய மெல்கிசதேக் என்னும் நபரின் வழியாக கிறிஸ்து முன்னறிவிக்கப்படுகிறார். அவர் கொண்டுவந்த அப்பமும் இரசமும் தம்முடைய உடலையும் இரத்தத்தையும் அர்ப்பண உணவாகக் கையளித்து, மக்களோடு ஒரு புதிய உடன்படிக்கை செய்துகொண்ட கிறிஸ்துவுடைய தியாகம் நிறைந்த காணிக்கைக்கு முன்அடையாளமாக திகழ்கிறது.